**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 1, January 2022** **E-ISSN: 2583-0481**

# Life of the Middle Class People in the Novels of Kamuthurai

**K. Parameswaran,** Research Scholar of Tamil, Government College, Chittur, Palakkad, Kerala.
**ORCiD: https://orcid.org/0000-0003-3061-4316**
**DOI: 10.5281/zenodo.6621519**

## Abstract

*All literary forms, from literature to contemporary short story novels, shine with the social events of the time, not only capturing the life of man but also bringing it before our eyes. Tamil literature focuses on the life-based concept and a first-level approach to the virtues of life focusing on people's lives in contemporary emerging literature as well as concept and contextual representations of contemporary society. While novel helps to learn about the people of the area and their occupations and customs as well as the inner life of the people in a distinct manner. Kamuthurai's novels focus on such glimpses of middle-class people in his novels. His novels centre around the life of the people in the Theni district. The purpose of this article is to illustrate the way of life of middle-class people in his select novels.*

**Keywords:** Kamudhurai Novels, Life, Middle-Class People.

## References
[1] *Tamil Ilakkiya Varalaru Padaipilakkiya Parvaieil* - Dr. Nalinidevi.
[2] *Tamil Ilakkiyakotpadugal* - Dr. Muthushanmugham.
[3] *Ikakkiyathiranaivu.* - Dr.S.Balachandhran.
[4] *Navena Tamililakkiya Arimugham* - Jayamohan.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# காமுத்துரை நாவல்களில் நடுத்தர மக்களின் வாழ்வியல்

**கு.பரமேசுவரன்**, முனைவர் பட்ட ஆய்வாளர், அரசுக்கல்லூரி, சித்தூர், பாலக்காடு, கேரளா.
ORCiD: https://orcid.org/0000-0003-3061-4316
DOI: 10.5281/zenodo.6621519

**ஆய்வுச்சுருக்கம்**

*மனிதனுடைய வாழ்வினைப் படம்பிடிப்பது மட்டும் அல்ல அதனை நம் கண்முன் அப்படியே கொண்டு வந்து நிறுத்தம் பணியினை இலக்கியங்கள் முதல் தற்கால சிறுகதை, நாவல், கவிதை ஆகிய அனைத்து இலக்கிய வடிவங்களும் அந்தந்தக் காலங்களில் ஏற்படும் சமுதாய நிகழ்வுகளை எடுத்து இயம்பும் காலக்கண்ணாடிகளாக மிளிர்கின்றன. இதனுள் தேனி மாவட்டத்தை இருப்பிடமாகக் கொண்ட காமுத்துரை என்பவரின் நாவல்களில் அவர்தம் சுற்றுவட்டார மக்களின் வாழ்க்கை முறைகளை கதைக்களமாக வைத்து நாவல்கள் புனைவதில் கை தேர்ந்தவராக உள்ளார். காமுத்துரை நாவல்களில் அவர் மண் சார்ந்த மக்களின் வாழ்வியல் முறைகளைப் பற்றி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**திறவுச்சொற்கள்:** காமுத்திரை நாவல், நடுத்தர மக்கள், வாழ்வியல்.

**முன்னுரை**

கதை மற்றும் நாவல் இலக்கியம் பல்வேறு பரிமாணங்களைக் கடந்து வந்துக்கொண்டிருக்கிறது.

> **"மக்கள் வாழ்வை மையமாகக்கொண்டு மேற்கொள்ளப்பெறும் ஆய்வுக்கு அம்மக்கள் சமுதாயக்கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்ட பொருள் முதல் நிலை அணுகுமுறை சிறந்த பயன்தரும் காலந்தோறும் தோன்றியுள்ள இலக்கியங்களின் பாடுபொருளும் புறவடிவம் தத்தம் காலச்சமுதாயத்தை உணர்த்தி நிற்கின்றன".1**

அவ்வகையில் நாவல் இலக்கியம் வட்டாரம் சார்ந்த மக்களைப்பற்றியும் அவர்களின் தொழில்கள் பழக்க வழக்கங்கள் உறவு முறை, வாழ்க்கை முறை அறிய உதவுகிறது.

> **"புனைகதை மனித உறவுகளில் ஏற்படும் சிக்கல்களைச் சித்தரிக்கின்றது. சமுதாய சம்பிரதாயங்களிலிருந்தும், நெறிகளிலிருந்தும் தனிமனிதன் பிறழ்கின்றபோது புனைகதை தோன்றுகிறது".2**

மனிதச்சமுதாயம் அன்றாடம் சந்திக்கும் வாழ்வியல் சிக்கல்களையும், எதார்த்தங்களையும் பல்வேறு படைப்பாளிகள் தங்கள் படைப்புகளில் பிரதிபலிக்கின்றன. சமுதாய நலன் அடைவதில் அக்கறைக்கொண்ட படைப்பாளிகள் ஒழுக்கக்கூறுகளை முன்னிறுத்தி படைப்பாக்கங்களை இச்சமுதாய வெளியில் விதைக்கின்றனர்.

> **"நாவலாசிரியர் தம் சொந்த வாழ்க்கையின் அனுபவங்களைக் கொண்டு அவற்றின் பிரதிபலிப்பாகக் கதை மாந்தரைப் படைத்துக் காட்டுவதும் உண்டு. இம்முறையில் அமையும் கதை மாந்தர் நாவல் படிப்போரின் நெஞ்சில் நீங்கா இடம் பெற்று திகழ்வர்".3**

தேனிமாவட்டம் அல்லி நகரம் பகுதியினைச் சுற்றி தன் கதையின் களங்களைத் தேர்வு செய்து புதினங்களைப் புனைந்த பெருமை காமுத்துரைக்கு உண்டு. அவர் தன் கதைகளுக்கான களங்களைத் தேடி அலைந்தது இல்லை. தன் அன்றாட வாழ்வில் தான் சந்திக்கும் பகுதிகளையும், அங்குள்ள மக்களின் வாழ்வியலையும் கதைக்களமாக்கியுள்ளார். தன் பகுதியைச் சுற்றியுள்ள தொழிற்சாலை, குடும்பப்பின்னணி மக்களின் வாழ்க்கைச் சூழல் குடும்ப உறவு அவர்களின் பிரச்சனைகள், அவலங்கள் மகிழ்ச்சி ஆகியவை இவரின் கதைகளுக்குள் ஊடுருவி சஞ்சரித்துள்ளது. அதனைப்பற்றி இங்கு காண்போம்.

**காமுத்துரையின் படைப்பாளுமை**

காமுத்துரையின் முதல் நாவலான "முற்றாத இரவொன்றில்" ஓர் இரவில் நடைபெறும் விறுவிறுப்பான நிகழ்ச்சிகளுக்கு மாயன், வசந்தி காதல்தான் ஆரம்பத்தூண்டுதல் நாவலில் மாயனும், வசந்தியும் ஓரங்கட்டப்படுகின்றனர். இருவரும் ஒரே சாதியாக இருந்தும் பொருளாதாரம் இவர்களை இணைவதற்கு தடையாகிறது. நாட்டாமை, வீரபத்ரன், காமாட்சி ஆகிய கதாபாத்திரங்கள் இவர்களிடையே எதிர் எதிர் நிலைபாடுகளை எடுக்கும் விதம் அமைக்கப்பட்டுள்ளது. காமாட்சியின் மகள் வசந்தி அவள் தன் வீட்டில் வேலை செய்யும் மாயனை காதலித்து மணந்து கொள்வதை ஏற்க மறுக்கிறாள். இந்நாவலில் முழுவதும் மாயனின் பெற்றோர்களின் மணக்குமறலும், போராட்டமும் வாசகர்களை உணர்ச்சிக்குள் தள்ளுகிறது. காதல் திருமணத்தை அங்கீகரித்தால் அனைத்து சாதியினரும் இதுபோல் சாதிவிட்டு, பொருளாதார ஏற்றத்தாழ்வினைத் தாண்டியும் திருமணம் மேற்கொள்வார்கள் என்னும் நிலைபாட்டில் நாவலின் கதையோட்டத்தை விறுவிறுப்பாகக் கொண்டு செல்கிறார். இன்னும் பல கிராமங்களில் மக்களின் வாழ்வில் அது கீழ் வர்க்கமாக இருப்பினும், மேல் வர்க்கமாக இருப்பினும் காதல் என்பதை தீர்மானிப்பது வசதியும், அந்தஸ்தும் தான் என்னும் நிலையுள்ளது என்பதை காமுத்துரையின் முற்றாத இரவொன்றில் எடுத்துக்கூறுகிறது. ஒரே இரவில் நடக்கும் சம்பாஷைனைகளில் நாவலை நகர்த்தி இருப்பது பாராட்டுக்குரியது.

> **"அப்பா சாதி மதமெல்லாம் மொதலாளிங்க ஊதிவிடுற சங்குங்கறீங்க" ஆட்டோகாரர் கேட்டார். ஆமா தோழர், மனுசெ தோனுனது கொரங்குல இருந்து இல்லையா. அப்ப நாடார் கொரங்கு செட்டியார் கொரங்குன்னு தனித்தனியாவா பொறந்தான்..? எல்லாரும் பின்னால வச்சுக்கிட்டதுதான. ஒரு பேச்சுக்கு வெச்சுக்குவோம் நம்மள மாதிரி உழைக்கிற சளங்க எல்லாரும் அய்யர்லிருந்து அடிமட்டத்து வரைக்கும் ஒரு சாதி அதே போல மொதலாளிங்க பூராம் ஒரு சாதினு வச்சுக்குவோம்." 4**

என்பதிலிருந்து மனித வாழ்வில் மனங்களை இணைக்கும் பாலம் பணம் தான் என்பதினை இந்நாவலில் சித்தரிக்கிறார்.

**காமுத்துரைப் படைப்புகளின் கதைமாந்தர்கள்**

இடதுசரி இயக்கத்தோடு தொடார்படையவராக இருப்பதால் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற கொள்கைகளைக் கதைக்குள் கலந்து தருகிறார். தொழிலாளர்களோடு தொழிலாளியாய் வாழ்ந்துக் கொண்டிருக்கும் படைப்பாளிக்குக் கதையின் கருவுக்காக அலைய வேண்டிய நிலை இல்லை. தன்னுடைய "மில்" என்னும் நாவலில் தன் பகுதியில் காலத்தின் கட்டாயத்தில் வருகைப் புரிந்த ஒரு தொழிற்சாலையையும் அங்கு வேலை செய்த தொழிலாளர்களையும் கதைக்குள் உலாவ விட்டுள்ளார். அரசியல், பொருளாதாரம். தொழிலாளிகள். தொழிற்சாலை.

தொழிற்சங்கத்தின் தேவை. முதலாளிகளின் சுரண்டல். விவசாயிகளுக்கு ஏற்படும் பிரச்சனைகள் போன்றவற்றை முன்னிறுத்தி இவரின் கதைகள் போராட்ட வீரியத்தோடு நடைபோடுகின்றன. இவருடைய கதைகளில் சமையல் தொழில் செய்யும் சமையல்காரர்களின் வாழ்க்கைச் சூழலை பின்னணியாகக் கொண்டு "குதிப்பி" நாவல் அமைகிறது. இவருடைய நாவல் "குதிப்பி" சமையல் தொழிலை செய்யும் தொழிலாளர்களின் வாழ்க்கைப் போராட்டங்களையும், அவர்களின் குடும்பங்கள் பொருளாதார சிக்கலில் சீரழியும் அவஸ்தைகளையும், அவர்களின் வாழ்வியலின் சிக்கலையும் முன்னிறுத்துகிறது. மட்டுமின்றி இவருடைய கதாபாத்திரங்கள் பெரும்பாலும் அன்றாடம் தான் வாழ்வினை நகர்த்துவதற்குத் திண்டாடும் பொறிக்கடலை வியாபாரி, பழக்கடை, பூக்கடை, பாத்திரக்கடை, சித்தாள் வேலை இவர்களின் வாழ்வியல் போராட்டங்களை மையப்படுத்தி கதைக்களம் அமைகிறது.

**தொழிலாளர்களின் பிரச்சனை**

காமுத்துரையின் "மில்" நாவல் நம்மைச் சூழ்ந்துள்ள அரசியல், பொருளியல், குடும்ப உறவு, காதல், தொழிலாளர்களின் தேவை, முதலாளிகளின் கூட்டணி, சுரண்டல், நையாடல், தொழிலாளர்களை நசுக்கும் விதம் வேளாண்மையின் இழப்புகள் எல்லாவற்றையும் நம் கண்முன் கொண்டுவரும் பிரமிப்பான நாவல். மாரிமுத்து என்பவர் மில்லில் இருந்து ஒரு நாள் லீவு எடுப்பதற்கு படும் அவஸ்தை மிக உணர்வு பூர்வமாக சொல்லுகிறார். மேஸ்திரியிடமும், கேஷியரிடமும், கிளர்க்கிடமும், கொத்தனாரிடமும் மாறி மாறி சென்று பந்தாடப்படுகிறார்.

**"சார் லீவு வேணும் சார்" லீவா? கேள்விக்குறி ஒன்றை நெற்றியில் ஏற்றினார் கிளார்க்.**

**"லீவெல்லாம் நமக்கு குடுக்கச் சொல்லி உத்தரவு இல்லை" சார் சார் தங்கச்சிக்கு நிச்சயதார்த்தம் சார்"**

**மாஸ்டர் வந்துருவாரு அவர்கிட்டக்கேளு தரச்சொன்னாத் தர்ரேன்" 5**

மாஸ்டரிடம் கேட்கிறான். மாஸ்டர் மேஸ்திரியிடம் கேட்கச் சொல்கிறார். லீவு பெற்றுவிட்டான்.

**"இமாலய சாதனையை சாதித்து விட்டது போல நெஞ்சமெல்லாம் லேசாகி வானவெளியில் பிறப்பதுபோல் ஸ்பின்னிங் டிபார்ட்மெண்டைவிட்டு வெளியேறி பெரிய கேட்டுக்குள் கால்கள் பறந்தன. இனியும் வேறு எவராகிலும் கூப்பிட்டு விடுவார்களோ என்ற பயமும் துரத்தியது" 6**

இந்நாவலின் வாயிலாக சமூகப் பொறுப்புள்ள ஒரு மனிதராக காமுத்துரை உருமாறியுள்ளார். தொழிலாளர்கள் மீது ஏவப்படும் கொடுமைகளைக் கண்டு பொங்கும் ஆளுமையை இவரின் படைப்புகளில் காணலாம். இவருடைய "குதிப்பி" என்னும் நாவல் சமையல் தொழிலாளர்களை முன்னிறுத்தியது அவர்களின் வாழ்க்கைப் போராட்டத்தை, தொழில் கலாசாரத்தை, அன்பை, காதலை, துரோகத்தை, ஏமாற்றங்களை, தோல்விகளை, குடிப்பழக்கத்தால் ஏற்படும் சீரழிவை, விரிவாகப் பதிவு செய்யும் ஆவணமாக அமைந்துள்ளது. சேது, சாரதி, பாக்கியம், முஜிபர், வளர்மதி, சரவணன் என எளிய மக்களின் அன்றாட வாழ்வியல் மனக்குமறல்கள் நாவல் நெடுகிலும் நம்மை பரிதாபப்படச் செய்கிறது. எந்த பூச்சுமற்ற சரளமான மொழியில் இந்த வாழ்வைச் சொல்லிச் செல்ல அவரது வாழ்வு அனுபவம் அவருக்குத் துணைபுரிகிறது.

**"சத்தமில்லாம சாப்பிட்டுட்டு அவெவ ஒழுக்கமா வீட்டுக்குப் போயிரனும். இந்த வேலைல எவனுக்கும் சம்பளபாக்கி இல்ல" கடைசி வார்த்தையை மட்டும் ஓட்டல்காரரை சாட்சி வைத்து**

**அடுத்தொருதரம் சொல்லிவிட்டு அனைவரையும் கிளப்பிவிட முயற்சித்தான் சேது முக்கியமாக சாரதிக்குச் சொன்னான். சம்பளக்காச பத்திரமாப் புடிச்சு வீட்ல சேத்திரு சொல்லிட்டேன்" 7**

சேது வழக்கம் போல இரண்டு அவன்ஸ் மட்டும் குடித்துவிட்டு ஒரு ஆம்லட் சாப்பிட்டு விட்டு சிகரட் ஒன்றை பற்ற வைத்து பாத்திரக் கடைக்குத் திரும்பினான்" இது தான் சமையல்காரர்களின் வாழ்க்கை நிலை அவர்களின் குடும்பம் அன்றாடம் அல்லல் படவும், கடன் படவும், பொருளாதரத்தின் பின்னடையவும் இவர்களின் பழக்கங்கள் ஒரு போராளியாக மாறுவதை "குதிப்பி" நாவல் எடுத்துரைக்கிறது.

**பெண்களின் நிலை**

காமுத்துரையின் "அலைவரிசை" நாவலில் பக்கங்கள் கடந்து செல்வதற்கு நிகராகவே வாசிப்பவரின் மனமும் இவளுக்கு என்ன நேருமோ ஏதேனும் ஒரு விடிவு கிடைத்து விடக்கூடாதா என்று படபடவென அடித்துக் கொள்ளும் விதமாகத் தான் நிகழ்வுகள் நடந்தேறுகின்றன. பெண் இன்னும் தன் எண்ணத்தையும், உணர்வுகளை வெளிக்காட்ட முடியாத ஒரு வாழ்வைத் தான் நடந்தேற்றி கொண்டிருக்கிறாள். என்பதை இந்நாவலின் உள்ளே ஊடே உணரச் செய்கிறார். பல வீடுகளில் பெண்பிள்ளைகளைப் படிக்க வைக்காமல் வேலைக்காரியாக்கும் சூழல் இன்னும் இருக்கத்தான் செய்கிறது.

**"விடியற்காலையில் எழுந்து மாட்டுக் கொட்டத்துக்குப் போக சள்ளையாய் இருக்கும் இதற்காகவே சில நாள்களில் முதல் நாள் சாயங்காலமே போய் சாணியை எடுத்து வந்து சாணிச் சட்டிக்குள் போட்டு மூடி வைத்து விடுவாள். அதிலும் கூட இரவு விளக்கு பொருத்தி விட்டால், வீட்டு லட்சுமியை வெளியில் அனுப்பமாட்டார்கள். காலையில் அம்மாவோ அம்மாச்சியோ மூடி வைத்த சட்டியைத் திறந்து எடுத்துத் தெளித்துக் கொள்வார்கள். இவள் கொஞ்ச நேரம் சேர்த்துத் தூங்கலாம்".8**

இது தான் இவள்களின் நிலை, பையன் தூங்கலாம் பெண் பிள்ளைகள் தூங்கக் கூட முடியாது. இக்கதையில் வரும் பெண்ணிற்கு இளவயதில் அவளை விடவயதில் பெரியவனுக்குத் திருமணம் செய்து வைத்து விதவையாகும் கோலம் ஏற்படுகிறது. இப்படைப்பின் வாயிலாக காமுத்துரை அவள் மீது அனுதாபத்தைக் கோரவில்லை இதோ பாருங்கள் இப்படித்தான் இருக்கு என்று ஒரு பெண்ணுடைய வாழ்க்கையின் அன்றாட நிகழ்வுகளையும், போராட்டங்களை மன ஏக்கங்களையும் காட்சிப்படுத்துகிறார். முழுக்க முழுக்க கிராமியப் பின்னணியில் எழுதப்பட்டுள்ள இப்புதினம் பெண்ணினத்தின் மீது கீழ் வர்க்கம், நடுத்தர வர்க்கம் இவர்களின் வாழ்வியல் சுமைகளையும், வாழ்க்கைப் பாட்டிற்கும் பெண்களை அடகு வைக்கும் அவலம் அரங்கேறுதலை ஆணித்தரமாகக் கூறுகிறார்.

**பாசப்பின்னணி**

**"பொம்பளயா ஒங்க ஆயா? யாத்தே பேய் புடிச்சவபோல கல்லுனு பாக்காம, முள்ளுனு நிக்காமா சதக்கு சதக்குனு எட்டு வச்சு ஓடுறா பாவம் தனம், கழுத்துல கயிறு கட்டாத ஆட்டுக்குட்டியா லொங்கு லொங்குன்று இழுபட்டு ஓடி வாரா நல்ல வேள அந்த மானைக்கி நாண்டுகிட்டுத்தே செத்திருப்பா ஏற்கனவே அவ கெணத்துல எறங்குன தச்சிரு ஏங்க ஆயா பேசுன பேச்சுல எங்குட்டும் ஊரவிட்டே ஓடிப் போயிருப்பாளோன்னு சந்தேகம் வந்திருச்சு" என்றாள்.9**

இது “கோட்டை வீடு” நாவலில் தன் பேரனை உடல் நலம் சரியில்லாத போது பொட்டியம்மனை வேண்டி ஆயாவின் பாசம் வெளிப்படும் வரிகள். கிராமங்களில் இன்னும் பாசங்களும். உறவுகளும் ஒன்றுக்குள் ஒன்று பின்னி பிணைந்திருப்பதைப் பிரதிபலிக்கிறது “கோட்டை வீடு” நாவல் ஒரு முறை வீரபாண்டி ஊரில் தன் வீட்டிற்கு வந்த பேரன் சரவணனின் உடல் நிலை சரியிவல்லாமல் போகவே ஆயா பேரனை பலமைல் தூரம் தன் பேரனைத் தூக்கிக்கொண்டு மருத்துவச்சியிடம் சேர்க்கும் காட்சி ஒரு வீட்டிற்குள் பணம், காசை விட பாசம்தான் மகிழ்ச்சிக்குக் காரணம் என்பதனை காமுத்துரை கண்ணியத்துடன் காட்டுகிறார்.

**முடிவுரை**

காமுத்துரையின் படைப்புகளில் பெரும்பாலும் விளிம்புநிலை மக்களின் வாழ்க்கை நகர்த்தும் அவலங்களையும் அவர்தம் வறுமைச் சூழலும் நம் கண் முன் படைப்பாக்கமாக்குகிறார். பொருளாதாரப் பின்டைவுகளால் அவர்களின் கண்ணீரும் உணர்வுப் பூர்வமாக காட்டப்படுகிறது. தேனி வட்ட மக்களின் வாழ்வியலை அவர்களின் ஒரு பிரதிநிதியாக விவரிக்கிறார். இவருடைய படைப்புகள் பெரும்பாலும் அன்றாடம் தங்கள் வாழ்வாதாரத்தை நகர்த்த திணறும் மக்களின் வாழ்வியலுக்கு முகாந்திரமாகவும், நம்மை முணுமுணுக்கவைக்கவும் செய்கிறது.

**துணை நூற்பட்டியல்**

[1] முனைவர் நா.நளினிதேவி. *தமிழ் இலக்கிய வரலாறு படைப்பிலக்கியப் பார்வையில்*. ப. 85

[2] டாக்டர்.முத்துசண்முகம். *தமிழ் இலக்கிய கோட்பாடுகள்*. ப.102

[3] டாக்டர்.சு.பாலச்சந்திரன். *இலக்கிய திறனாய்வு*, ப.199

[4] ம.காமுத்துரை. *முற்றாத இரவொன்றில்* ப. 97

[5] ம.காமுத்துரை. *மில்*, ப. 47

[6] மேலது, ப. 48

[7] ம.காமுத்துரை.*குதிப்பி*, ப. 25,

[8] ம.காமுத்துரை. *அலைவரிசை*, ப. 41

[9] ம.காமுத்துரை. *கோட்டை வீடு* ப. 22

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.